★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

அம்பர் சர்க்கா வித்தியாலயம்

காங்கயத்தில் ஒன்று அமையுமாம்

சென்னை, நவ. 10—

திருப்பூர் அருகில் உள்ள காங்கயம் எனும் இடத்தில் ஒரு அம்பர் சர்க்கா, வித்தியாலயம் துவக்குவது என்று சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்.

டிசம்பரில் துவக்கும் இந்த வித்யாலயத்தில் 50 பேர் கொண்ட

(4-ம் பக்கம் பார்க்க)

மலர் 4] சென்னை: ஐப்பசி 27உ திங்கள் (12—11—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 28உ செவ்வாய் (13—11—56) [இதழ் 132

9-ஆண்டு சுதந்திர சர்க்கார் செய்தது என்ன?

மக்கள் அரைப் பட்டினி நிலையில் வாழ்கிறார்கள்

அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டாமா?

நிலைமை நீடித்தால் 'பலாத்காரப் புரட்சி' தவிர்க்க முடியாததாகிவிடும்

அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் காட்கில் எச்சரிக்கை

"மக்களின் அரைப் பட்டினி நிலையைப் போக்க சர்க்கார் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், பெரும் புரட்சி தவிர்க்க முடியாததாகிவிடும்"

என்று நேரு பண்டிதருக்கும் அவரது சகாக்களுக்கும், காங்கிரஸ் கட்சிக் கூட்டத்திலேயே எச்சரிக்கை தரப்பட்டிருக்கிறது.

இந்த எச்சரிக்கையை விடுத்த என். வி. காட்கில் கூறியதாவது:

"மக்களுக்கு அவர்களது அடிப்படைத் தேவைகளான உணவும் உடையும் நியாயமான விலையில் கிடைக்க சர்க்கார் ஏதாவது செய்தாக வேண்டும்.

"மக்கள் நீண்ட நெடுங்காலமாகப் பெருமளவு கஷ்டப்பட்டுவிட்டார்கள்; அவர்களது பொருளாதார நிலை உயர்த்தப்படாவிட்டால், ஒரு பலாத்காரப் புரட்சி ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

"சுதந்திரம் பெற்று ஒன்பதாண்டுகள் ஆகிவிட்டன; நாம் ஆற்றியுள்ள பணிகளை அளவிட இதுவே தக்க தருணம்.

"தென்னாட்டில் ஒரு தொழிலாளி, தனது வருட வருமானமான 365 ரூபாயில் ரூ. 27 மட்டுமே துணிகள் வாங்கிக் கொள்ள உபயோகிக்க முடிகிறது என்று ஒரு நிபுணர் அறிக்கை கூறுகிறது.

"மற்றுமொரு நிபுணர், திட்டக் குழுவிற்கு யோசனை கூறும்போது, இந்தியாவில் 25 சதவிகிதம் பேர் 'அரைப் பட்டினி' நிலையில் வாழ்கிறார்கள் என்று சுட்டிக் காட்டியிருக்கிறார்.

"இந்த நிலைமாற சர்க்கார் நடவடிக்கை எடுக்க வேண்டாமா?

கள்ள மார்க்கெட்!

"கடந்த 1948-ல் துணிக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டன. இதனால் துணி வியாபாரிகள் ரூ 200 கோடி வரை இலாபம் சம்பாதித்திருக்கின்றனர்; இதற்கு வருமான வரி விதிக்கப்பட்டதாகவே தெரியவில்லை.

"கள்ள மார்க்கெட்டைத் தடுக்கக் கடுமையான நடவடிக்கை எடுக்கத் தவறினால் மக்களுக்கு உபதேசம் செய்வதால் மட்டும் பலன் விட்டாது.

"வேறு எதும் செய்ய முடியாவிடினும் கள்ள மார்க்கெட்காரர்களைக் கண்டுபிடித்து நாம் தண்டித்தாக வேண்டும்."

பண்டிதரின் 'கொள்கைக் குழப்பம்'

மேலும் ஒரு முறை நிரூபிக்கப்படுகிறது

ஹங்கேரி பற்றி பண்டிதரின் முரண்பட்ட பேச்சுகள்

'மானக்கேடானவை' என்கிறார் ஜெயப்பிரகாஷ் நாராயணன்

'இந்தியாவிலேயே மிகவும் குழம்பிப்போன மேதை பண்டித நேருதான்' என்பதை பண்டித நேரு மீண்டுமோர் முறை உறுதி செய்திருக்கிறார்.

கொள்கைக் குழப்பத்திற்குப் பெயர்போன அந்தப் பெரிய மனிதர், ஹங்கேரி விவகாரத்தில், முரண்பட்டப் போக்கினைக் கடைப்பிடித்து வருகிறார்.

ஹங்கேரியில் ரஷ்யா தலையிட்டது பற்றி அவருக்கு ஏற்பட்டுள்ள கொள்கைக் குழப்பம், கடந்த ஒரு வாரத்திற்குள் அவர் தெரிவித்துள்ள முரண்பட்டக் கருத்துக்களிலிருந்து தெரியவருகிறது.

ரஷ்யாவின் தலையீடு கூடாது என்றும், ரஷ்யத் துருப்புகள் உடனடியாக ஹங்கேரியிலிருந்து வெளியேறவேண்டும் என்றும் இம்ரே நாகியின் தலைமையில் இயங்கிய சர்க்கார் ஐ. நா.-விடம் தெரிவித்ததுடன், ஹங்கேரியின் சுதந்திரத்திற்கும், சுய ஆதிபத்திய உரிமைக்கும் பங்கம் விளைவிக்கும் ரஷ்யத் துருப்புகள் ஹங்கேரியிலிருந்து வெளியேறவும், ஹங்கேரியின் நடுநிலையைக் காப்பாற்றவும் ஐ. நா. உதவ வேண்டும் என்றும் நாகி சர்க்கார் அபயக்குரல் எழுப்பியதாகச் செய்தி வந்தது.

அதேபோது, ஹங்கேரியில் நாகி தலைமையில் நடைபெற்ற 'சுதந்திரப் புரட்சி'யை ஒடுக்க மேலும் ரஷ்ய இராணுவம் புடாபெஸ்டு நோக்கி விரைவதாகவும் செய்திகள் வந்தன.

இவற்றைக்கண்ட நேரு, உடனே, 'எகிப்திலும், ஹங்கேரியிலும் நடைபெறும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் என்னை வருத்துகின்றன' என்றும், 'ஹங்கேரியில் ரஷ்யா தலையிடுவது கூடாது' என்றும், 'எகிப்தும், ஹங்கேரியும் ஒரேவகையான பிரச்சினைகள்' என்றும், 'பஞ்சசீலம் சிலருக்கு இராஜதந்திரத்திற்கான அழகான வாசகங்களாகவே தோன்றுகிறது போலும்' என்றும் பண்டித நேரு ஓலமிட்டார்!

ஆனால், புல்கானின் கடிதம் கிடைத்ததும், 'இல்லை, இல்லை! ஹங்கேரி விவகாரம் வேறு; ஹங்கேரியில் ரஷ்யா தலையிட்டது ஹங்கேரி சர்க்காரின் வேண்டுகோளின் பேரில்தான்' என்றும் பேச முற்பட்டிருக்கிறார்; இதன் மூலம் அவரது 'கொள்கைக் குழப்பம்' தெளிவாகத் தெரிகிறது.

ஜெயப்பிரகாஷ் கண்டனம்

ஹங்கேரி பற்றிய பண்டிதரின் கொள்கைக் குழப்பத்தை ஜெயப்பிரகாஷ் நாராயணன், வன்மையாகக் கண்டித்திருக்கிறார்.

'இரட்டை நிலை'

"எகிப்து பற்றியும் ஹங்கேரி பற்றியும் இரட்டை நிலையை நேரு பண்டிதர் கடைப்பிடிக்கிறார். இது பெரும் அவக்கேடானது. எகிப்திற்குப் பொருந்தும் நியாயம் ஹங்கேரிக்கும் பொருந்தும். அப்படியிருக்க, துவக்கத்தில் இரண்டையும் ஒரே தரத்தில் வைத்துப் பேசிய நேரு, திடீரென ஹங்கேரி பற்றி வேறு விதமாகப் பேசுவது, நமது சர்க்காரின் கொள்கைக் குழப்பத்தைக் காட்டுவதாகும். இந்தக் கதை மிக வெட்கம் தருவது—மானக்கேடானது; நேரு பண்டிதர் முதலில் ஒருவகைக் கருத்தும், அடுத்து முரண்பட்ட கருத்தும் அறிவிப்பது இந்தியாவின் பெருமைக்கு உகந்ததல்ல"

என்று, கண்டன முழக்கமிட்டிருக்கிறார், ஜெயப்பிரகாஷ்!

"எகிப்து நிலை பற்றி நேடன் தரும் தகவலை எவரும் சரி என்று ஒப்பமாட்டார்கள். அவர் சரியான தகவலே தருவார் என்று எவரும் எதிர்பார்க்கமாட்டார்கள். ஆனால் ஹங்கேரி விவகாரத்தில் மட்டும் புல்கானின் தரும் தகவலைச் சரி என ஒப்புகிறார், பண்டிதர்! இது என்ன நியாயமோ?"

இழந்த மானத்தைத் திரும்பப் பெற முயற்சி!

சென்ற தேர்தலில் காங்கிரசை எதிர்த்தோருக்கு இடமில்லையாம்

கல்கத்தா, நவ. 11—

சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்த்தவர்களை, வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாக நியமிக்கப் போவதில்லை என்று இந்தியக் காங்கிரஸ் தலைவர் தேபர் அறிவித்துள்ளார்.

[சென்னை மாநில அரசாங்க அமைச்சரவையில் இடம் பெற்றுள்ள மாணிக்கவேலரும் இராமசாமி படையாச்சியும் சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது]

இந்த முடிவை அறிவித்துப் பேசுகையில் தேபர், காங்கிரஸ் நிறுவனத்தின் கட்டுப்பாட்டை பலப்படுத்தவும், மக்களின் நன்மையைக் கருதியும் இந்த முடிவை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்றும் வற்புறுத்தினாராம்!

பழைய பல்லவியே!

கல்கத்தா, நவ. 11—

வரும் பொதுத் தேர்தலில், புதியவர்களுக்கு மூன்றில் ஒரு பங்கும், 15 சதவிகிதம் பெண்களுக்கும், மைனாரிட்டிகளுக்கு விகிதாச்சாரப்படியும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமென்று காங்கிரஸ் முனைந்திருப்பதாகத் தெரிகிறது.

நடிப்பிசைப் புலவர் தாயகம் திரும்புகிறார்

சிங்கப்பூரிலிருந்து செவ்வாயன்று மாலை சென்னை வருவார்

விமான நிலையத்தில் வரவேற்பு அளிப்பதற்கு மகத்தான ஏற்பாடுகள்

சென்னை நவ. 12—

மலாயா, சிங்கப்பூர் நாடுகளில் அறிவியக்கத் தூதுவராகச் சென்று, பகுத்தறிவு பரப்பும் நாடகங்கள் பலவற்றை நடத்தி, வெற்றிகரமான சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், 13—11—56 செவ்வாயன்று மாலை 5 மணிக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் வந்து சேர்வார்கள்.

தோழர் கே. ஆர். இராமசாமி அவர்கள், அண்ணா அவர்களுக்கு, 'சிங்கப்பூரிலிருந்து விமானம் மூலம் புறப்பட்டு, 13—11—56 அன்று மாலை வந்து சேருகிறேன்,' என்று தந்தி மூலம் தகவல் தந்திருக்கிறார்கள்.

செய்தி அறிந்ததும், தமிழகத்தின் கலைத் தூதுவராகத் தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்து திரும்பும் நடிப்பிசைப் புலவருக்கு விமான நிலையத்தில் மகத்தானதோர் வரவேற்புத் தருவதற்காகச் சென்னை நகரிலும் சுற்றுப்புறங்களிலும் உள்ள தி. மு. கழகக் கிளையினரும், கழகச் சார்புடைய மன்றங்களும் படிப்பகங்களும் கலைக்கூடங்களும் பெருமுயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன.

13—11—56 அன்று சிங்கப்பூரிலிருந்து சென்னை வரும் விமானம் மாலை சுமார் 5 மணி அளவில் வந்து சேரும் என்று தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை • 12-11-'56 திங்கள்

அடிப்படை இலட்சணம்

ஏறத்தாழ இருநூறு ஆண்டுக் காலம், இந்தியத் துணைக் கண்டத்தைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், அரசியல் துறையில் ஆதிக்கம் செலுத்திவந்து இருக்கிறது. அரசியல் துறையில் இருந்துவந்த ஆதிக்கம் துண்டிக்கப்பட்டுவிட்டபோதிலும் கூட, பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் அடிச்சுவட்டைப் பிரதிபலித்துக்கொண்டிருக்கின்ற ஏற்பாடுகள் பல இன்னும் இங்கு இருக்கத்தான் இருக்கின்றன.

அவைகளில் ஒன்றையும் விடாது ஒழித்துவிட்டு, அவைகளுக்குப் பதிலாகப் புதிய அமைப்புகளை உருவாக்குவது என்பது இயலாதது என்பதுடன் அர்த்தமற்றதுமாகும். எனவே, அத்தகைய அழிவு முயற்சியில் ஈடுபடுவது இறுதியில் தோல்வியாகவே முடிவுறும்.

பிரிட்டனின் ஆதிக்க அடிச்சுவட்டைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கும் பலவற்றுள்ளும், இந்தியத் துணைக்கண்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பார்லிமெண்டரி சனநாயக முறை முதன்மையானதாகும். அது மிகமிக முக்கியமானதோர் ஏற்பாடாக மதிக்கத்தகுந்ததுமாகும்.

சனநாயகத் தத்துவம் பிரிட்டிஷ் நாட்டின் பூர்வீகச் சொத்தாக இல்லாமல் இருக்கலாம். அதைச் செவ்வனே செயல்படுத்தும் முறை இருக்கிறதே, அதாவது பார்லிமெண்டரி சனநாயக முறை, அதை அந்தச் சிறுநாட்டின் தனிச் சிறப்பு என்றுதான் கொள்ளவேண்டும். அதைத்தான் உவப்புடன் அரசியல் அறிஞர்களும் ஏற்றுள்ளனர்.

பிரிட்டனின் பார்லிமெண்டரி சனநாயக முறையை, சிறந்த அடைக்காலின் மீது, இந்தியத் துணைக்கண்டத்தில் நிர்மாணித்து வளர்த்து வரப்போவதாக இந்தியப் பிரதமர் உள்ளிட்ட காங்கிரசுத் தலைவர்கள் அனைவரும் அறிவித்து வருகின்றனர். அதற்கேற்பத்தான், மக்கள் சபை, மாகாண சட்டசபை, மாவட்ட ஆட்சி மன்றம் போன்ற ஆட்சி அமைப்புகளையும், அவைகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்முறைகளையும் தாங்கள் கைக்கொண்டு இருப்பதாகவும், காங்கிரசுத் தலைவர்கள் முழங்கியும் வருகின்றனர்.

உருவத்தைப் பொறுத்தவரையில், பார்லிமெண்டரி சனநாயகமுறை செயல்படத்தக்க வகையில் இந்த ஆட்சி அமைப்புகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதில் ஐயமில்லை. ஆனால் உருவத்திற்கு ஒப்ப, பிரிட்டனில் காணப்பெறும் பார்லிமெண்டரி சனநாயக உணர்வோ அல்லது பண்போ இங்குள்ள அமைப்புகளில் இடம் பெற்று இருக்கின்றது எனச் சொல்லுவதற்கில்லை.

இங்கிலாந்தில் உள்ளது போல் பார்லிமெண்டரி சனநாயக முறை, உருவும் உணர்வும் ஒன்றுபட்டு, அதற்கென இங்குள்ள அமைப்புகளில் செயல்பட வேண்டுமானால், ஆட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரசுக் கட்சித் தலைவர்கள் சனநாயக உணர்வு பெறுவது, முதல் முதலாகத் தேவைப்படும் ஒன்றாகும். காங்கிரசுத் தலைவர்களிடை இன்றைய தினம், தேவைப்படும் அந்த சனநாயக உணர்வு அறவே கிடையாது. உதட்டளவோடு அவர்களுடைய சனநாயகப் பணி முற்றுப் பெற்றுவிடுகிறதைத்தான் நாம் கண்டுவருகிறோம்.

ஓரளவிற்கு உயர்ந்த சனநாயக உணர்வு கொண்டவர் எனப் புகழ்ந்து பாராட்டப் பெற்றுவரும் இந்தியப் பிரதமர் நேரு அவர்களின் சனநாயகப் பணியே, மேற்குறிப்பிட்ட உதட்டளவு நிலையில் நின்றுவிடக்கூடியதுதான். அப்பெருமகனின் போக்கே அதுவானல் மற்றக் காங்கிரசுக் கட்சி கைகாட்டிகளுக்கும் சனநாயக உணர்வுக்கும் இருந்துவரும் உறவு முறையைக் குறித்துக் குறிப்பிட வேண்டியது ஒன்றுமே இல்லை.

மாகாணப் புனரமைப்புக் குழுவின் முடிவு அறிவிக்கப்பட்டதும், தங்கள் தங்கள் விருப்பத்திற்கு மாறுகத் தீர்ப்பு இருப்பது கண்டு, ஒவ்வொரு மொழிவழியினரும் குழு முடிவை எதிர்த்துக் கிளர்ச்சியிலீடுபட்டனர். அக்கிளர்ச்சியில் முதற்கட்டத்தில் மராட்டியர்களும், இரண்டாவது கட்டத்தில் குசராத்தியர்களும் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம், வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுவிட்டது. இரு மொழியினரும் தனித்தனியாகச்செய்த ஆர்ப்பாட்டத்தை அடக்க காங்கிரசுக்கட்சியாளர்கள் எடுத்துக் கொண்ட அடக்குமுறைகளும், அவ்வார்ப்பர்ட்டங்குறித்து இந்தியப் பிரதமர் அவ்வப்பொழுது பேசிய பேச்சுக்களும், காங்கிரசுக் கட்சிக்கும் பார்லிமெண்டரி சனநாயக முறைக்கும் இருந்துவரும் உதட்டளவு உறவை மெய்ப்பித்துக் காட்டுவனவாக அமைந்தன.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள், மக்கள் சபை மூலம் ஒரு முடிவிற்கு வந்துவிட்டால், அம்முடிவை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டமோ கிளர்ச்சியோ செய்வது கூடாது—அது பார்லிமெண்டரி சனநாயக முறையாகாது என, இந்தியப் பிரதமர் நேரு அவர்கள், பார்லிமெண்டரி சனநாயக முறையில் மக்கள் சபைக்கும் மக்களுக்கும் இருந்துத் தீரவேண்டிய தொடர்பு குறித்து விளக்கம் தந்தார். பார்லிமெண்டரி சனநாயக முறையில் மக்கள்சபை முடிவே இறுதியானது — அதை மாற்ற மக்கள் கிளர்ச்சி செய்யக்கூடாது—அதற்கு மாருக அத்தீர்ப்புக்கு மக்கள் தலைவணங்கவேண்டும்—என்றும் பண்டிதர், புதுப்புது வியாக்கியானங்களைப் புனைந்து வந்தார்.

மக்கள்சபை முடிவை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி செய்யலாம்—அவ்வுரிமை மக்களுக்கு எப்பொழுதும் இருந்துவரும்—இதுவே பார்லிமெண்டரி சனநாயக முறையின் உள்ளடக்கம்—என வற்புறுத்திக் கூறும் வகையில், இங்கிலாந்து நாட்டில் நிகழ்ச்சிகள் நடைபெற்றுள்ளன. அந்தச் சம்பவங்கள், இந்தியப் பிரதமரின் கூற்றைப் பொய்யாக்கி விட்டதுடன், நமது மக்களுக்குப் புத்தறிவையும் தெளிவையும் தரும் படிப்பினையாகவும் அமைந்துள்ளன.

எகிப்தை பிரிட்டன் அக்கிரமமாகத் தாக்கத் தொடங்கியது. தாக்குதலை நடத்திய பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி ஆட்சிக்கு, பிரிட்டிஷ் மக்கள் சபையின் முடிவு பெருந்துணையாக அமைந்தது.

இருந்தாலும், இங்கிலாந்து மக்கள் சபையின் முடிவிற்குக் கட்டுப்பட்டுவிடாமல், கன்சர்வேடிவ் கட்சியினர்களின் அக்கிரமத்தைக் கண்டித்துக் கிளர்ச்சியிலீடுபடலாயினர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்திருந்த மக்களை அளவு கடந்து செல்லவிடாது கண்காணித்து வந்த குதிரைப் போலீஸ் படையினர்மீது, அந்தப் புரவிகளுக்கு மிரட்சியூட்டும் வகையில், பட்டாசுகளைக் கொளுத்தி வீசி எறிந்துள்ளனர் ஆர்ப்பாட்டக்காரர்கள். அப்படி வீசிய மக்களைத் தடிகொண்டு நையப் புடைக்காதும், துப்பாக்கி கொண்டு சுட்டு வீழ்த்தாதும், கூடியிருந்த கிளர்ச்சியினரை அக்குதிரைப் படை வீரர்கள் கலைந்து செல்ல வகை செய்துள்ளனர்.

பம்பாயிலும், குசராத்திலும் பலரை சுட்டு வீழ்த்திய காங்கிரஸ் ஆட்சியாளர்களின் 'அகிம்சா முறை', பிரிட்டிஷ் குதிரைப் படை வீரர்கள் மேற்கொண்ட 'பலாத்காரச் செயலு'டன் ஒப்பவைத்து நோக்கி முடிவுகட்டத் தக்கதாகும்.

பிரிட்டிஷ் பார்லிமெண்டில், கன்சர்வேடிவ் ஆட்சியாளர்களின் அக்கிரமத்தைக் கண்டித்த அளவுடன், தொழிற்கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வாய்மூடி இருந்துவிடவில்லை. பார்லிமெண்ட் செய்த முடிவை எதிர்த்துப் பொதுக்கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தி, இங்கிலாந்து முழுதும் கிளர்ச்சி செய்தனர்.

இங்கிலாந்தில் உள்ள தொழிற்கட்சியினர் ஆளத்தெரியாதவர்களல்லர். ஏற்கனவே ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள். இந்தியத் துணைக்கண்டத்துக்குச் சுதந்திரம்கூடக் கொடுத்திருப்பவர்கள்.

பார்லிமெண்டரி சனநாயக முறை, இங்கிலாந்து தொழிற்கட்சியினருக்குத் தெரியாது என்று கூற உலகில் ஒருவருக்கும் துணிவு இருக்க முடியாது. பிரிட்டிஷ் பார்லிமெண்டின் முடிவுக்கு எதிராகவே தொழிற்கட்சியினர், அந்த நாட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பார்லிமெண்டரி சனநாயகத்தின் தாயகத்தைச் சேர்ந்தவர்கள், பார்லிமெண்டின் தீர்ப்பே இறுதியானது—அதற்கு அடிபணிவதே முறை—என்று இருந்துவிடாது, எகிப்துமீது வலியச் சென்று தாக்கிய அநீதியை எதிர்க்கும் வகையில், அதற்குப் பார்லிமெண்டின் ஆதரவு இருக்கிறது என்று தெரிந்த பிறகும்கூட, ஆட்சியாளர்களின் வெறிச் செயலைக் கண்டிக்கும் புனிதப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பார்லிமெண்டின் முடிவை எதிர்த்துக் கிளர்ச்சி செய்யும் தொழிற்கட்சியினரை பார்த்து பார்லிமெண்ட் முடிவிற்குத் தலைவணங்கியே ஆகவேண்டும் — அதுவே முறை—அதுவே எதிர்க்கட்சிகளின் நடைமுறை—என, பிரிட்டிஷ் பிரதமர், அரசியல் போதனைபுரிய முன்வரவில்லை. அந்த நாட்டில் ஆட்சியாளர்களை ஆதரிக்கும் ஏடுகள்கூட, பார்லிமெண்ட் முடிவிற்கு எதிராகத் தொழிற்கட்சியினர் செய்த ஆர்ப்பாட்டங்களைக் கண்டித்து எழுதத் துணியவில்லை. ஆனால், இங்கோ

மக்கள் சபை முடிவே இறுதியானது--அதை எதிர்க்க மக்கள் எண்ணவும்கூடாது!--

மக்கள்சபை முடிவிற்கு அடிபணியுங்கள் — மக்களின் கடமை அதுதான்!—

பார்லிமெண்டரி சனநாயக முறை, அதுதான்! அதுவேதான்!—என்று இந்தியப் பிரதமர் நேரு பெருமகன் பிரசங்கம் புரிகிறார்!

அவ்வதிகார தற்காப்பு போதனைக்கு, இந்த நாட்டு ஏடுகளும் பக்கமேளம் வாசிக்கின்றன!

பார்லிமெண்டரி சனநாயக முறை, மக்கள்சபை முடிவுடன் கட்டுப்பட்டுவிடக் கூடியதல்ல—அதற்கு மேலும் சென்று மக்களை பேசவைக்கக் கூடியது. இந்த உண்மையைத்தான் பிரிட்டிஷ் மக்களின் சொல்லும் செயலும் நமக்கும், காங்கிரசு ஆளவந்தார்களுக்கும் அரிய வழிகாட்டியாக அமைந்திருக்கிறது.

மக்கள்சபை முடிவு கூறிவிட்டாலும், அதை எதிர்த்து மக்கள் பேசுவார்கள்—இதோ இங்கிலாந்திலும் பேசுகிறார்கள்—எப்பொழுதும் பேசியே தீருவார்கள். அதுவே, பார்லிமெண்டரி சனநாயக முறையின் அடிப்படை இலட்சணமாகும்.

படித்தவரிடை

வேலையில்லாத் திண்டாட்டம்

பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் குடிசைத் தொழில்களாம்

எர்ணகுளம்—

கேரள மாநிலத்தில் படித்துவிட்டு வேலையற்றிருப்போர் தொகை மிக அதிகமாக இருப்பதாகவும், இவர்களுக்கு வேலை தரும் பிரச்சினையைத் தீர்க்க சிறு குடிசைத் தொழில் வளர்ச்சிதான் சரியான பரிகாரம் என்றும் சமுதாய நலத் திட்ட மந்திரியான எஸ். கே. டே என்பார் இங்கு பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

சமுதாய நலத் திட்டங்களும் தேசிய விஸ்தரிப்புத் திட்டங்களும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதில் பெரும் அளவு உபயோகப்பட்டிருக்கின்றன என்றும் அவர் பெருமைப்பட்டுக்கொண்டாராம்!

கூடியவிரைவில் கூட்டுறவு முறையில் சிறு அளவு குடிசைத் தொழில்களைத் துவக்கினால் சர்க்கார் பண உதவி செய்யும் என்றும், கேரளத்தில் அதற்காக ஒரு நிறுவனம் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினாராம்.

பரிசு கிடைத்தும் பலன் பெறவில்லை!

ஐதராபாத், நவ. 8—

புற்றுநோய் நிதி சேகரிப்பு 'லாட்டரி'யில், மத்திய இரயில்வே முன்னாள் ஊழியர் ஒருவருக்கு ரூ. 10,000 பரிசு கிடைத்தது; ஆனால், அந்தப் பரிசுத் தொகையைப் பெறுவதற்கான தகுதிச் சீட்டை அவர் தொலைத்துவிட்டாராம்! ஆகவே அவர், பெருத்த ஏமாற்றமும் வருத்தமும் அடைந்துள்ளாராம்.

தசாம்ச நாணயங்கள்

சிரமமின்றி நாட்டு மக்கள் மேற்கொண்டு விடுவார்களாம்

டில்லி அமைச்சர் கருத்து

புதுடில்லி, நவ 6—

"1957 ஏப்ரல் 1-ந்தேதி முதல் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டபின், சுமார் 3 அல்லது 4 ஆண்டு காலத்துக்கு இப்போதுள்ள நாணயங்கள் செலாவணியில் இருந்துவரும்; ரூபாயில் மாறுதல் இருக்காது; அதேபோல், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்களிலும் மாறுதல் இல்லை ரூபாய் 100 பைசாக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கும்; இப்போது அது 64 பைசாக்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பைசா வரிசையில் இரண்டு, ஐந்து, பத்து, ஐம்பது பைசாக்கள் இருக்கும்.

"மாறுதல் காலத்தில் பழைய நாணயங்களும் புதிய நாணயங்களும் சேர்ந்து புழங்கும்போது குழப்பத்தைத் தவிர்ப்பதற்காக, புதிய பைசா நாணயங்கள் 'நயா பைசா' என்று குறிப்பிடப்படும். மாறுதல் பூர்த்தியாகி பழைய நாணயங்கள் படிப்படியாகத் திரும்பப் பெறப்பட்டபின், பைசா, 'நயா பைசா' என்று குறிப்பிடப்பட்டால், வெறுமனே 'பைசா' என்று மாத்திரம் குறிப்பிடப்படும்."

இவ்வாறு, 'இந்தியாவின் புதிய நாணய முறை' என்ற பிரசுரத்தின் முன்னுரையில், மத்திய ஆட்சியின் வருமானவரி பாதுகாப்புச் செலவின அமைச்சர் ஏ. சி. குஹா குறிப்பிட்டுவிட்டு மேலும் கூறியுள்ளதாவது:—

"புதிய முறையை நமது மக்கள் அதிகச் சிரமமில்லாமல் மேற்கொண்டு விடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. சமூகத்தில் கல்வியறிவு பெற்றோர், சாதாரண மக்களுக்குப் புதிய முறை பற்றிய நுட்பங்களைத் தெளிவுபடுத்தி, அவர்கள் அதைத் தெரிந்து கொள்ளும்படி செய்ய உதவுவார்கள் என்று நம்பப்படுகிறது.

"இத்தகைய ஒரு பெரிய மாறுதல் செய்யும்போது மக்கள் அதைச் சரியான முறையில் உணர்ந்து மனமார ஒத்துழைப்பார்கள் என்று சர்க்கார் இறுதியாக நம்புகிறார்கள்; இந்த மாறுதல் மக்களுக்கு முக்கியமாக எதிர்கால சந்ததிகளுக்கு நன்மை செய்யுமென்பதில் சர்க்காருக்கு நிச்சயமாய் நம்பிக்கை இருக்கிறது."

கேரள மாநிலத்தில் தேர்தல் ஏற்பாடுகள்!

சில விவரங்கள்

கேரளத்தில் மொத்தம் 70,00,000 வாக்காளர் உள்ளனர்.

சட்டசபைக்கு 126 பேரையும் பார்லிமெண்டுக்கு 18 பேரையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

மொத்தம் 9,200 ஓட்டுச் சாவடிகள் ஏற்படுத்தப்படும்.

வாக்காளர்கள், தங்கள் வாக்குச் சீட்டுக்களைப் பதிவு செய்ய 1,00,000 ஓட்டுப் பெட்டிகள் தேவைப்படும்; ஆகவே, கைவசத்திலுள்ள பெட்டிகளைப் பழுது பார்த்துவிட்டனராம்; மேலும் தேவைப்படும் 34,000 பெட்டிகளுக்கு ஐதராபாத் கம்பெனி ஒன்றுக்கு 'ஆர்டர்' தந்துள்ளனராம்.

அன்பளிப்பு

கடலூர் — தேவனாம்பட்டினம் தோழர் பி. சத்தியமூர்த்தி அவர்கள், 7-11-56ல் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2/ அன்பளிப்பாகத் தந்துள்ளதை வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

வேலூர் (சேலம்) தி. மு. க. செயலாளர் தோழர் வி. ஏ. இராமநாதன் 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்காக அன்பளிப்பாகத் தந்த ரூ. 1 வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

ஆசிரியருக்குக் கடிதம் :

'அரசியல் அந்தஸ்தில் காஷ்மீரும் ஹங்கேரியும் ஒன்றும்!

'வெண்ணெயும் சுண்ணும்பும் ஒன்றே' எனும் விசித்திர வாதம்

ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு பி. இராமமூர்த்தி சப்பைக்கட்டு

அன்புள்ள ஐயா,

ஹங்கேரியில் ரஷ்யா தலையிட்டது சரியானதென்று வாதிட நினைத்த, கம்யூனிஸ்டுக் கட்சியின் பெரும் மேதாவியென அழைக்கப்படும் தோழர் பி. இராமமூர்த்தி, ஒரு அபத்தமான வாதத்தைக் கிளப்பியிருக்கிறார்.

பம்பாய் மாதுங்காவில் கடந்த 5—11—56 அன்று அவர் பேசிய போது குறிப்பிட்டதாக, அவர்களது சென்னைத் தமிழ்த் தினசரி பேச்சு ஒன்றை வெளியிட்டுள்ளது

"காஷ்மீரில் பிரதமர் ஷேக் அப்துல்லாவைக் கைது செய்தது ஏன்? காரணம், அமெரிக்காவின் தூண்டுதலால் ஷேக் அப்துல்லா தனி நாடு கோரிக்கையை வைத்தார்; அக்கோரிக்கை பலிதமானால், அமெரிக்கா காலூன்றும்; அதனால், காஷ்மீரின் சுதந்திரத்திற்கும் இந்தியாவின் ஆதிபத்திய உரிமைக்கும் ஆபத்து வருமென்று உணர்ந்ததால், உதவிக்கு வருமாறு காஷ்மீர் சர்க்கார் இந்தியாவை அழைத்தது; ஷேக்அப்துல்லா கைது செய்யப்பட்டார்; தனி ராஜ்யமான காஷ்மீருக்கு நமது துருப்புகள் சென்றன; அதை, கம்யூனிஸ்டுகளான நாங்கள், 'சரி' என்று ஆதரித்தோம்; பஞ்சசீலத்திற்கு இது முற்றிலும் சரி என்று ஏற்றுக் கொண்டோம்.

"இதேபோல, ஹங்கேரியிலும் அமெரிக்கா தலையிட்டது; ஹங்கேரி சர்க்கார் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ரஷ்யத் துருப்புகள் சென்றன; எனவே, காஷ்மீர் சரி என்றால் ஹங்கேரியும் சரிதானே?"

என்று தோழர் பி. இராமமூர்த்தி குறிப்பிட்டதாக வெளியிடப்பட்டிருக்கிறது; இது, எவ்வளவு ஆபத்தமான வாதம்?

'காஷ்மீருக்கு ஷேக் அப்துல்லா தனி நாட்டுச் சுதந்திரம் கோரியது அமெரிக்காவின் தூண்டுதலால் தான்,' என்று கூறப்பட்டிருப்பது, விவாதத்திற்குரியதாகும்.

அதேபோல, 'ஹங்கேரிப் புரட்சிக்குக் காரணமானவர்கள் அமெரிக்கர்தான்,' என்பதும் முடிவாகிவிட்ட ஒன்றல்ல; குறுகிய எதிர்காலம்தான் உண்மையை அம்பலப்படுத்தவேண்டும்.

'ஹங்கேரியில், அமெரிக்காவின் தூண்டுதலால்தான் பிற்போக்குவாதிகள் புரட்சியில் ஈடுபட்டார்கள்' என்பதை விவாதத்திற்காக ஒத்துக்கொள்வதானாலும், பிரதமரான நாகி தன் நிலையைப் பாதுகாத்துக்கொள்ளவும், புடாபெஸ்ட் கலவரங்களை அடக்கவும் அமெரிக்கத் துருப்புகளை அழைத்திருந்தால், கம்யூனிஸ்டுகள் கூறுகிற வாதம் பொடியாகிவிடுமே! ஹங்கேரி ஒரு தனி சுதந்திர நாடுதான் என்றால், அதற்கு, ரஷ்யாவைப் போல இதர எந்த ஒரு சுதந்திர நாட்டின் உதவியையும் கோர உரிமையுண்டல்லவா? அப்படி நாகி, வேறு ஏதாவது ஒரு நாட்டினை உதவிக்கு அழைத்திருந்தால், கம்யூனிஸ்டுகள், 'ரஷ்யத் தலையீடு சரி' என்று வாதிப்பது போல அப்போது, 'சரி' என்று சொல்லுவார்களா? அந்த நிலை, மூன்றாவது உலக யுத்தத்தைத் தோற்றுவித்திருக்குமே! சிறக,

ஹங்கேரியும், காஷ்மீரும் வெவ்வேறான பிரச்சினைகள். காஷ்மீருக்கும் இந்தியாவிற்கும் இருந்துவந்த—இருந்துவருகிற அரசியல் உறவுகளுக்கும், ஹங்கேரிக்கும் ரஷ்யாவிற்கும் இருந்துவந்த—இருந்துவருகிற உறவுகளுக்கும் அடிப்படையிலேயே வேறுபாடு உண்டு.

ஐ நா.-வில் ஹங்கேரிக்கு பிரதிநிதி உண்டு; காஷ்மீருக்குக் கிடையாது.

'தனிச் சுதந்திர நாடு' என்ற சர்வதேசிய அந்தஸ்து ஹங்கேரிக்கு அன்றும் இன்றும் உண்டு; ஆனால், காஷ்மீருக்கு, அன்றும் இன்றும் அந்த அந்தஸ்து கிடையாது.

காஷ்மீர் இந்தியாவின் பல ராஜ்யங்களுள் ஒன்று என்று அண்மையில் அமுலாகியுள்ள மாநிலப் புது அமைப்புச் சட்டம் கூறுகிறது; ஆனால், ஹங்கேரிக்கும் ரஷ்யாவிற்கும அப்படிப்பட்ட உறவு கிடையாது.

தன் அணைப்பிற்குட்பட்ட ஒரு ராஜ்ய சர்க்காரான காஷ்மீர் சர்க்காருக்கு, டில்லி சர்க்கார் இராணுவத்தை அனுப்பி உதவுவதற்கும், ஒரு தனிச் சுதந்திர நாடான ஹங்கேரிக்குள் ரஷ்யா படையெடுப்பதற்கும் வித்தியாசம் இல்லையா?

சராசரி அறிவு படைத்தவர்களுக்கும் விளங்கக்கூடிய இந்தச் சாதாரண உண்மை, பெரிய மேதாவியெனக் கூறப்படும் தோழர் பி. இராமமூர்த்திக்குத் தெரியாதா? தெரியாது என்று நான் நினைக்கவில்லை

தெரிந்தும், தனக்கும், தான் சார்ந்துள்ள கட்சிக்கும் ஏற்பட்டுள்ள கொள்கைக் குழப்பத்தாலும், ரஷ்யத் தலைமைக்குக் கட்டுப்படாத சுதந்திரமான கொள்கைகளை உருவாக்கிக் கொள்ளப் போவதாகக் கம்யூனிஸ்டுகள் முடிவெடுத்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளதாலும், ரஷ்யாவின் 'மானத்தை'க் காக்க வேண்டியுள்ள 'மாஸ்கோ தாசர்'களாகவே இன்றும் அவர்கள் இருப்பதாலும்தான் இதுபோன்ற அபத்தமான வாதங்களைக் கிளப்புகிறார்கள் என்று கருதுகிறேன். கம்யூனிஸ்டுகள் இப்படிப்பட்ட அபத்தங்களை அள்ளிக் கொட்டுவது என்றும் புதிதல்லவே?

அன்புள்ள
கமலப்பிரியன்

குமரி மாவட்ட நீர்ப் பாசனத் திட்டம்

கன்னியாகுமரி மாவட்ட நீர்ப்பாசன திட்டத்திற்காக சென்னை அரசாங்கம் ரூ. 1–கோடி ஒதுக்கியுள்ளதாம். நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, அதிகப்படியான உணவு உற்பத்தி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் நிதி தாரீர்!

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! பொதுமக்களே! பொதுத் தேர்தல் நெருங்குகிறது! மிக விரைவாக நெருங்கிக் கொண்டிருக்கிறது! பொதுத் தேர்தலில் ஈடுபடுதலாகிய மக்களாட்சி முறைமையைத் தூய உள்ளத்தோடும், நேரிய செயல் முறையோடும் நிறைவேற்றுவதென்று திராவிட முன்னேற்றக் கழகம் முடிவு செய்திருப்பதை எல்லோரும் நன்கு அறிவீர்கள்! அடுத்துவரும் பொதுத் தேர்தலில், 150 தொகுதிகளில் தி. மு. கழகம் போட்டியிட வாய்ப்பு இருக்கிறதென்று, நாடெங்கும் சுற்றி விவரம் அறிந்துவந்துள்ள தேர்தல் ஆய்வுக்குழு, சுவையான செய்தியைத் தந்துள்ளது. இந்தச் சுவையான செய்தியைச் செயலாக்கிக் காட்ட, இலட்சக்கணக்கிலே பொருள் தேவைப்படுகிறது. கழகத் தோழர்கள் தேர்தல் களத்திலே வீறுநடை போட்டு வெற்றிஉலா வரவேண்டுமானால், தொகுதி தோறும் செய்யப்பட வேண்டிய அடிப்படை நியாயமான செலவுகளுக்கே ஆயிரக்கணக்கில் ஆகும்.

எனவேதான், இச்சூழ்நிலையை ஆராய்ந்தறிந்த மத்திய செயற்குழு, தேர்தல் பணியை நிறைவேற்ற, குறைந்த அளவு ரூபாய் ஐந்து இலட்சம் தேவையென்று மதிப்பிட்டது.

சிறுதுளி பெருவெள்ளம்!

கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் பெருமுயற்சி எடுத்து, கைநிறைய காசுகளை அள்ளியள்ளி வழங்குவார்களேயானால், கழகம் எதிர்பார்க்கும் ரூபாய் ஐந்து இலட்சம் விரைவிலே சேர்ந்துவிடும் என்பதில் ஐயமில்லை.

கிளைக் கழகங்கள், ஆங்காங்கு முறைப்படி முயற்சி எடுத்துத் நிதி திரட்டி, திரட்டிடும் தொகையைச் சேரச்சேர அவ்வப்போது நேரே தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

மாவட்டச் செயலாளர்கள், ஆங்காங்குள்ள கிளைக் கழகங்களை அவ்வப்போது தூண்டி, நிதி சேர்த்துத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும் பணியில் துணைபுரியுமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தனி அமைப்புகளும், தனிப்பட்ட தோழர்களும் தனித்தனியாகத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பிவைக்கும் தேர்தல் நிதியும் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேர்தல் நெருங்குகிறது!
பொறுப்பு மிகுகிறது!
கடமையை விரைந்து செய்ய வாரீர்!—வாரீர்!!

வணக்கம்

'அறிவகம்'
சென்னை-13
5 11—56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

குறிப்பு:—நிதி அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:—
பொதுச்செயலாளர்—தி. மு. கழகம்
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

★★

காஞ்சியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

வேலாயுதம் படிப்பக ஆண்டு விழாவில் கலந்துகொண்டார்

8-11-56 மாலை 6 மணியளவில், காஞ்சி—பிள்ளையார் பாளையம் வேலாயுதம படிப்பக (தி. மு. கழக கிளை) ஆண்டு நிறைவு விழா திருவேகம்பன் தெரு தோப்பில் தோழர் டி. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், காஞ்சி-கல்யாணசுந்தரம், செ. சடையாண்டி, எஸ். முருகேசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இன்றைய ஆட்சியாளரின் அவல நிலையை விளக்கியும், தேர்தலில் தி. மு. கழகம் ஈடுபட இருப்பதின் அவசியத்தை விளக்கியும் நீண்டதோர் உரை நிகழ்த்தினார்.

இரவு 9 மணியளவில் கூட்டம் முடிவுற்றது. பொதுக்கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கே. வி. கே. சாமி

மறைவுக்கு அனுதாபம்

★

இராயபாளையம் :

3-10-56ல் மதுரை மாவட்டம் இராயபாளையத்தில் தி. மு. கழகச் சார்பில் மௌன ஊர்வலமும், இரவு 8 மணிக்கு தோழர் அ பெருமாள் தலைமையில் அனுதாபப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் அ. இராமசாமி, மு. அ. எல்லையா, எஸ். நாராயணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

புதியம்புத்தூர் :

14-10-56 காலை 9 மணிக்கு இவ்வூர் கே. வி கே. சாமி நாடக மன்றத்தின் சார்பில் மௌன ஊர்வலமும், 10 மணிக்கு தோழர் பு. ரா. சண்முகம் தலைமையில் அனுதாபக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பெ. துரைசாமி; இ. துரைசாமி, ஈ. கோவில் மணி, ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு விழா

புதுவையில் கொண்டாட்டம்

இன்றையத் தமிழ் நாடக உலகிற்குப் புது வாழ்வளித்தவரும், தமிழ் நாடகக் கலையில் மறுமலர்ச்சியை உண்டாக்கினவரும், தொன்றுதொட்டுத் தமிழகத்தில் ஆடிவந்த தெருக்கூத்தை, மேடை—காட்சித் திரைகளுடன் நடிக்கும் நவீன நாடகமாக்கி, பல இளைஞர்களுக்குப் பயிற்சிதந்து தமிழுக்கு மேலும் அணி செய்த மறைந்த நாடகத் தலைமை ஆசிரியர் திரு டி. டி. சங்கரதாஸ் அவர்களது தொண்டுக்குப் பாராட்டும் மரியாதையும் அளிக்கும்முகத்தான், அவர் பிறந்த தினமாகிய இத்திங்கள் 13-ந் தேதியன்று புதுவையில் நினைவு விழா ஒன்று நடத்தப்பெறுகிறது.

அவரது சமாதியின்மீது நினைவு மண்டபம் ஒன்று கட்டும் பொறுப்பைத் தென்னிந்திய நடிகர் சங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

விழா நிகழ்ச்சிகள் :

13-ந் தேதி காலை 8 மணிக்கு சங்கரதாஸ் உருவப் படத்துடன் ஊர்வலமும், 10½ மணிக்கு திரு சிவா தலைமையில் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

திரு. வி.எஸ். மாத்யூஸ், நினைவு மண்டபத்தைத் திறந்துவைப்பார்.

மாலை 5½ மணிக்கு ஒதியஞ்சாலை மைதானத்தில் தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், கே. சாரங்கபாணி, டி எஸ் துரைராஜ், டி. எஸ். பாலையா, டி. என். இராமையாதாஸ், டி பாலசுப்பிரமணியம், டி. கே. என். சகோதரர்கள், டி என். சிவதாணு, எம். எம். மாரியப்பா, எம். எம். சிதம்பரநாதன், சீர்காழி – கோவிந்தராசன் ஆகியோரது இன்னிசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

சென்னை மேல் சபை உறுப்பினர் தொகை

ஐம்பதாகவே இருக்கும்

குடியரசுத்தலைவர் சீக்கிரமே உத்திரவிடுவாராம்

சென்னை, நவ. 9—

சென்னை மேல்(சட்ட)சபையின் உறுப்பினர் தொகையை 50 ஆக உயர்த்துவதற்கு டில்லி சர்க்கார் சம்மதித்துவிட்டார்களாம்!

மாநிலப் புது அமைப்புக்கு முன்னர் 51 உறுப்பினர்கள் இருந்தனர்; ஒரு உறுப்பினர் தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதால், அவர் மைசூர் சட்டசபைக்குச் சென்றுவிட்டார்; 50 உறுப்பினர்கள் எஞ்சினர்; ஆனால் மாநிலப் புது அமைப்புச் சட்டமோ '48 பேர்தான் இருக்கலாம்' என விதித்தது.

அதன் விளைவாக, பட்டதாரிகள் தேர்ந்தெடுத்த 4 உறுப்பினர்களில் இருவர், தங்கள் பதவிகளைத் துறக்க வேண்டும் என்று கூறப்பட்டது.

இந்த முடிவை எதிர்த்து டாக்டர் வி. கே. ஜான், உயர்நீதி மன்றத்தில், 'சட்டம் செல்லாது' என வாதிட்டார்; உயர்நீதி மன்றம் ஜானின் விவாதத்தை ஏற்றுக் கொண்டது. எனவே மாநில சர்க்கார், 'மேல் சபையின் உறுப்பினர் தொகை 50-தாகவே இருக்கலாம்' என்று டில்லிக்குச் சிபாரிசு செய்தனராம்.

இந்தச் சிபாரிசினை டில்லி ஏற்றுக் கொண்டுவிட்டதாகவும், சீக்கிரமே குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் சட்டம் ஒன்று பிறப்பிப்பார் என்றும் தெரியவருகிறது.

ரூ. 300 பரிசு பெற்றார்

இவ்வாண்டு மார்ச் திங்களில் சென்னை சர்க்காரால் நடத்தப்பெற்ற எஸ். எஸ். எல். சி. தேர்வில், மணவை மாவட்ட மன்ற உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவத் தோழர் கு. மாணிக்கம் என்பவர், தமிழ்ப் பரீட்சையில் அதிக எண்கள் பெற்றுத் தேர்வுற்றமையையொட்டி, தில்லைநாயக சுவாமிகள் நினைவு ரொக்கப் பரிசு ரூ. 300 பெற்றார்.

தோழர் கு மாணிக்கம், மணவை தி. மு கழக மாணவர் கிளையின் முன்னாள் செயற்குழு உறுப்பினர் என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. (ந. தி.)

நன்றி அறிவிப்பு

4—11—56-ல் நடைபெற்ற மகளிர் மன்றத் துவக்கவிழா வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைத்த சென்னை 8, 9, 17-வது வட்ட தி. மு. க. தோழர்களுக்கும், பள்ளியைத் தந்து உதவிய டாக்டர் குருசாமி முதலியார் டி. டி. வி. உயர்நிலைப்பள்ளி நிர்வாகிகளுக்கும், மற்ற உதவிகள் நல்கிய ஏனையோருக்கும் எங்கள் இதயம் கலந்த நன்றியை இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

சத்தியவாணி முத்து
தலைவர்

ஐந்தாண்டுத் திட்டப் பிரச்சாரம்!

நாடகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுமாம்

சென்னை, நவ 10—

ஐந்தாண்டுத் திட்டம் குறித்து பிரச்சாரம் செய்வதற்காக நாடகங்களை நடத்துவதென, சென்னை தகவல் அறிவிப்பு இலாகாவினர் முடிவு செய்திருக்கிறார்களாம்.

இதற்காக, (1) முழு நீள நாடகம்; (2) ஓரங்க நாடகம்; (3) வில்லுப்பாட்டு; — இவைகளை எழுதியனுப்புமாறு விரைவிலேயே இலாகா அறிவிப்புத் தருமாம்.

இவற்றில் சிறந்த ஒவ்வொன்றுக்கும் ரொக்கப் பரிசுகள் தரப்படுமாம்.

இந்த நாடக, வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள்மூலம் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படையான பலன்களைக் குறித்து மக்களுக்கு விளக்கம் தந்து, சர்க்காரின் நடவடிக்கைகளுக்கு அவர்களது ஒத்துழைப்பைப் பெற சர்க்கார் முயற்சிக்குமாம்.

முழு நீள நாடகத்திற்கு ஆயிரம் ரூபாய் பரிசு தரப்படும் என்றும், இதர இரண்டு பிரிவுகளுக்கும் கொஞ்சம் குறைவான தொகை பரிசாகத் தரப்படும் என்றும் கூறப்படுகிறது.

என்ன அவசியமோ!

ஐந்தாண்டுத் திட்டம் பள்ளி - கல்லூரிகளிலும் போதிக்கப்படும்

பம்பாய், நவ. 11—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் போதிக்கவேண்டும் என்றும், அதில் பரீட்சைகூட நடத்தலாம் என்றும் பண்டிதநேரு அ. இ. கா. க. கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

'பாக்தாத் ஒப்பந்தம் செத்துவிட்டது'

'ஆனால் அது மூட்டிய பெருந்தீ இன்னும் அணையவில்லை'

கல்கத்தா, நவ. 10—

'பாக்தாத் ஒப்பந்தம் செத்துவிட்டது' என்கிறார் நேரு பண்டிதர்!

'ஆனால், அந்த ஒப்பந்தம் சாவதற்கு முன்னால், அராபிய உலகம் முழுவதிலும் பெருநெருப்பை மூட்டியிருக்கிறது. இந்த நெருப்பு இன்னும் பழி வாங்கும் நோக்குடன் எரிந்துகொண்டிருக்கிறது எப்போது இந்தப் பெருந்தீ அணையும் என்று ஒருவருக்கும் தெரியாது' என்றும் நேரு கூறினாராம்!

"எகிப்தில் சூழ்நிலைகளை மோசமாக்குவதற்கும், அராபிய உலகைப் பிளவுபடுத்துவதற்கும் இந்தப் பாக்தாத் ஒப்பந்தம் காரணமாயிருந்தது.

"பல அராபிய நாடுகள் இதில் சேர்ந்திருந்தாலும், எகிப்து, சவூதி அரேபியா போன்றவை அதில் சேரவில்லை.

"இந்த இரண்டு நாடுகளும், தங்களது அண்டை நாடுகள் ஒப்பந்தம் செய்துகொண்ட நாடுகளிலிருந்து நவீன கால ஆயுதங்களைப் பெற்று பலமுள்ளனவாக ஆகிவருவதைக் கண்டு, தங்களுடைய ஆயுத பலத்தையும் பெருக்கிக் கொள்ள நினைத்து ரஷ்யாவிடமிருந்து உதவி எதிர்பார்த்தன.

"ஆனால் இன்று, எல்லா அராபிய நாடுகளும், எகிப்துமீது நடைபெறும் ஆக்கிரமிப்பை எதிர்க்கின்றன; இது, பாக்தாத் ஒப்பந்தம் செத்துவிட்டது என்பதையே காட்டுகிறது" என்றும் நேரு விளக்கம் தந்திருக்கிறார்.

சென்னை-பெத்துநாய்க்கன்பேட்டை தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி கலந்துகொண்டார்

10—11—56 மாலை $6\frac{1}{2}$ மணியளவில், சென்னை - பெத்துநாய்க்கன்பேட்டை 8-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், அம்மன் கோவில் தெரு, தர்கா பவுண்டரி திடலில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் சோ சுந்தரம் தலைமை வகித்தார்.

துவக்கத்தில் தோழர் ஆர். இராசன் சிறிதுநேரம் பேசிய பின், தோழர் சி ஆர். பாலசுந்தரம் அவர்கள், திராவிடத்தின் கனிச் செல்வங்களைக் குறித்தும், அவற்றை உபயோகிக்கத் தெரியாத—முடியாத காமராசர் சர்க்காரின் அலட்சியப் போக்கைக் கண்டித்தும், இத்தகைய நிலைகளிலிருந்து திராவிடம் விடுபட, தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் அதன் இலட்சியங்களுக்கும் பொதுமக்கள் ஆதரவு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

அடுத்துத் தோழர் வி. எஸ் கோவிந்தராசன் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது காமராசரும், அவரது சகாக்களும் பழி சுமத்தும் போக்கினைக் கண்டித்தும், அவர்களது முரண்பட்ட வாதங்களை விளக்கியும் சிறிதுநேரம் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள், காங்கிரஸ் சர்க்கார் மக்களுக்குச் செய்த துரோகத்தைச் சுட்டிக் காட்டியும், இன்றுள்ள தமிழகத்தின் நிலையை விளக்கியும் நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

இரவு $9\frac{1}{2}$ மணி அளவில் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

பொதுக்கூட்டத்தில் ஏராளமான பொதுமக்கள் கலந்துகொண்டார்கள்.

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களுக்கு சென்னை 4-வது வட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில் மலர் மாலையும், 8-வது வட்டம் மக்கள் மன்றச் சார்பில் கைத்தறி ஆடையும் அணிவிக்கப்பட்டன.

சென்னையில் தமிழக அமைப்பு நாள் விழா

14—11—56 மாலை 6-மணியளவில், சென்னை 27-வது வட்டம், பிள்ளையார் கோவில் தெருவில் (ஒற்றைவாடை தியேட்டர் அருகில்), தமிழக அமைப்பு நாள் விழாவும், 27-வது வட்ட தி. மு. கழகத் துவக்கவிழாவும் தோழர் ஏ. த. மாணிக்கம் தலைமையில் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச் செயலாளர் என்.வி. நடராசன், தோழர்கள் ஆ. இராசன், வே. அன்புமணி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

ஒய். எம். சி. ஏ., பட்டி மன்றம்

13—11—56 மாலை 6 மணிக்கு, சென்னை எஸ்பிளனேடு, ஒய். எம். சி. ஏ. பட்டி மன்றத்தில், திருபரலி. சு. நெல்லையப்பர் தலைமையில் தமிழக அமைப்பு நாள் விழா நடைபெறும். திரு மா. சு. சம்பந்தம், மற்றும் பலர் பேசுவர்.

ஐ. நா. படைகள்

சூயஸில் வைப்பதற்கு எகிப்து அனுமதிக்கவில்லையாம்

ஜெருசலம், நவ. 11—

"சூயஸ் கால்வாய் பகுதிகளில் ஐ. நா. படைகளை வைக்க இன்னும் எகிப்து அனுமதிக்கவில்லை" என்று ஐ. நா. படைத் தலைவர் பர்ன்ஸ் அறிவித்துள்ளார்.

பெருமைப்படுகின்றனர்?

சினாய் பாலைவனத்தில் எகிப்து துருப்புகள்மீது தாக்குதல் நடத்தியதின் காரணமாக 5 கோடி டாலருக்கு அதிகமான மதிப்புள்ள போர்த் தளவாடங்களைத் தாங்கள் கைப்பற்றியிருப்பதாக இஸ்ரேல் அரசாங்கம் அறிவித்துள்ளதாம்.

ஹங்கேரி நிலையை நேரில் காண ஐ.நா. பார்வையாளர்

ஹங்கேரியின் நிலைமையை நேரில் கண்டறிவதற்கு ஐ. நா. பார்வையாளரை அனுமதிக்கும் விஷயத்தைக் குறித்து ஹங்கேரி யோசித்துவருவதாக ஐ. நா. செயலாளருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

ரஷ்யா விவாதிக்குமாம்

ஹங்கேரிக்குப் பார்வையாளரை அனுப்புவது குறித்து ரஷ்யா விவாதிக்கத் தயாராக உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

கடற்கொள்ளை—பகற்கொள்ளை!

கல்கத்தா, நவ. 13—

"ஐந்து அல்ஜீரியத் தலைவர்களை, அவர்கள் பிரயாணம் செய்த விமானத்தைப் பலாத்காரமாகத் தங்கள் எல்லைக்குள் இறக்கிப் பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் கைது செய்தது பெரிய 'கடற்கொள்ளை—பகற்கொள்ளை' போன்றதாகும்" என்று பண்டித நேரு வர்ணித்திருக்கிறார்.

"இந்தச் சம்பவம் உலகின் போக்கு இன்று எப்படி இருக்கிறது என்று காட்டுவதாக உள்ளது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

டிச. 1ந் தேதிக்கு ஒத்திவைப்பு

புதுடில்லி, நவ. 10—

துறைமுகத் தொழிலாளர்கள் வரும் நவம்பர் 15-ந் தேதிக்குப் பதிலாக, டிசம்பர் முதல் தேதியிலிருந்து வேலை நிறுத்தம் துவங்குவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவை, அகில இந்திய துறைமுகத் தொழிலாளர் சங்கம் மேற்கொண்டிருக்கிறது.

சர்க்காருக்கும் சங்கத்திற்குமிடையே வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்காக நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டனவாம்.

தமிழுக்குத் தனிச் சிறப்பு

கோலாலம்பூர், நவ. 8—

மலேயாவிலுள்ள இந்தியர்களுக்குக் கல்வி கற்பிக்கும் திட்டத்தில் தமிழ் மொழி மட்டுமே கற்பிக்கப்படுவதற்கு வசதி செய்து தரப்படும் என்றும், வேறு எந்த ஒரு இந்திய மொழிக்கும் இந்த உதவியை சர்க்கார் அளிக்காது என்றும், மலேயா சர்க்கார் கல்வி அமைச்சர் அறிவித்துள்ளார்.

மலேயா காங்கிரஸ் தலைவர் மீது வழக்கு

ரூ. 1,50,000 நஷ்ட ஈடு கோரப்படுகிறது

கோலாலம்பூர், நவ. 8—

தற்போது மலேயாவின் தொழில் அமைச்சராக உள்ள மலேயா காங்கிரஸ் தலைவர் வி. டி. சம்பந்தம் அவர்கள்மீது முன்னாள் காங்கிரஸ் தலைவர் கே எல். தேவாசீர் ரூ. 1,50,000-க்கு மான நஷ்ட வழக்குத் தொடர்ந்துள்ளார்.

கடந்த செப்டம்பர் 18-ந்தேதியன்று, தன்னை காங்கிரஸ் உறுப்பினர் பதவியிலிருந்து எதேச்சாதிகாரமாகக் காரணமின்றி, நியாய மற்றமுறையில் நீக்கிய செயலானது, தன்மீது வீண் பழியையும் அவமானத்தையும் உண்டாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்பட்ட ஒன்று என அவர் தனது புகாரில் குறிப்பிட்டிருக்கிறார்.

நீதிமன்றத்தின் மூலம் தன்னுடைய உறுப்பினர் பதவியை நிலைநிறுத்திக் கொள்ள அவர் முனைந்திருப்பதாகத் தெரிகிறது.

இலங்கையில் கி. மனோகரன்

நிகழ்ச்சிகள்

15—11—56 மாலை 6-மணிக்கு, இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், கொழும்பு நாராயண குரு மண்டபத்தில் தோழர் கி. மனோகரன் அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிக்கப்படும். வரவேற்பு விழாவிற்குத் தோழர் மு. வெ. சாமி தலைமை வகிப்பார். தோழர் இரா. அதி. மணி வரவேற்புரையாற்றுவார்.

* * *

சிறப்புச் சொற்பொழிவு

18-11-56 மாலை $6\frac{1}{2}$ மணிக்கு, கொழும்பு நகர மண்டபத்தில், இலங்கை திராவிட முன்னேற்றக் கழக உதவி நிதிக்காகச் சிறப்புக் கூட்டம் ஒன்று நடைபெறும். இசைமணி க மகாலிங்கம் அவர்களின் இசை நிகழ்ச்சியும், கலைஞர் ம. கைலாயப்பிள்ளை அவர்களது மாணவியரின் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெறும் தோழர் கி. மனோகரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

திருமணம்

14—11—56-ல் தர்மகோடங்கிபட்டியில், செம்மாண்டம்பாளையம் தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் வி. வீரமணி திருமணம் தோழர் ஜி. நடேசன் தலைமையில் நடைபெறும், தோழர்கள் என். இரத்தினம் எம்.எல்.ஏ, ஜி முத்து, வி. கே. கலைமணி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

பொறியியல் கல்லூரியில் பொதுச்செயலாளர்

சென்னை—கிண்டி பொறியியல் கல்லூரி தமிழ் மன்றச் சார்பில் முத்தமிழ் கலைவிழா நவ. 13, 14, 15 ஆகிய நாட்களில் நடைபெறும்.

13-ந்தேதி மாலை 5-30 மணியளவில், புலவர் மயிலை-சிவமுத்து அவர்கள் விழாவினைத் துவக்கி வைப்பார்கள்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'இலக்கிய இன்பம்' பற்றி சொற்பொழிவாற்றுவார்.

14-ம் நாளன்று பேராசிரியர் பெருமாள், புலவர் நன்னன் ஆகியோரும், 15-ம் நாளன்று முதலமைச்சர் காமராசர் முதலானோரும் கலந்து கொள்வர்.

கழகக் கூட்டம்

★

பம்பாய்—மாதுங்கா

நப்பூ கார்டனில்

கிளைக் கழக 3-ம் ஆண்டு நிறைவுவிழா

15—11—56 மாலை 7 மணிக்கு

தலைவர்:

இ. சு. ச. பிச்சையா

வரவேற்புரை:

தோ. து. அன்புச்செழியன்

பேசுபவர்:

டி. கே. சீனிவாசன்

அப்பர் சர்க்கா வித்தியா...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குழுவினராக, 6 மாத காலத்தில் பயிற்சி தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரியவருகிறது

டில்லி சர்க்கார் நிறுவ உத்தேசித்துள்ள 30 வித்தியாலயங்களில் காங்கயம் வித்தியாலயமும் ஒன்றும்.

இந்த வித்தியாலயத்தில் நூல் சரிபார்த்தல், சர்க்கா வேலைகள் கற்றுத்தரப்படும் என்றும் பயிற்சி பெறுபவர்கள், மாநிலத்தில் அமைக்கப்படவிருக்கும் 4 'பரிசிரமாலய'ங்களில் ஆசிரியர்களாகப் பணிபுரிவர் என்றும் தெரிய வருகிறது.

400 ஆலைத் தொழிலாளர்

கூலி உயர்வு கோருவார்கள்

ஆமதாபாத், நவ 8—

இங்குள்ள ஆலைத் தொழிலாளர்கள், கூடிய விரைவில் கூலி உயர்வு கோருவார்கள் என்று தெரிகிறது.

400 ஆலைகளில் சுமார் 6,50,000 பேர் வேலை செய்து வருகின்றனர். அவர்களின் வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்றவாறு கூலி உயர்த்தப்பட வேண்டும் என்றும், எதிர்பார்த்த அளவிற்கு ஐந்தாண்டுத் திட்டத்தின் வெற்றிக்குத் தொழிலாளர்கள் தங்கள் பங்கினைச் செய்துள்ளனர் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு 8,500 டன் அமெரிக்கக் கோதுமை

புதுடில்லி, நவ. 10—

இந்தியாவுக்கும் அமெரிக்காவிற்குமிடையே சமீபத்தில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி 8,500 டன் அமெரிக்கக் கோதுமை பம்பாய் துறைமுகம் வந்து சேர்ந்துள்ளதாம்.

இந்தியப் பார்லிமெண்டின் காஷ்மீர் உறுப்பினர் கைது

ஸ்ரீநகர், நவ. 11—

இந்தியப் பார்லிமெண்டின் காஷ்மீர் உறுப்பினரான குலாம் காதர் நேற்று ஜம்முவில் கைது செய்யப்பட்டார்.

அவர் ஆட்சேபகரமான பிரசுரங்கள் கொண்டுவந்ததாகக் கூறப்படுகிறது.

எட்டு எம். எல். ஏ.-க்கள் இராஜிநாமா

பீகாரிலிருந்து சில பகுதிகளைப் பிரித்ததற்கு எதிர்ப்பாம்

பாட்னா, நவ. 9—

பீகார் சட்டசபையில் உள்ள ஜனதா கட்சியைச் சேர்ந்த எட்டு பேர் தங்கள் உறுப்பினர் பதவியை இராஜிநாமாச் செய்துள்ளனராம்.

பீகாரின் சில பகுதிகளை மேற்கு வங்க மாநிலத்திற்கு மாற்றுவதை எதிர்த்தே அவர்கள் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளனராம்.

தங்கள் கட்சி பதவிக்கு வந்தால், இழந்த பகுதிகளை மீட்கப்போரிடுவதாக கட்சித் தலைவர் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறாராம்.

நேருவுக்கு நினைவுறுத்த ஆர்ப்பாட்டம் நடத்தினர்

கல்கத்தா, நவ. 11—

அ. இ. கா. க. கூட்டம் நடைபெறும் இடத்திற்கு அருகாமையில் புரட்சி சோஷியலிஸ்டு தொண்டர்கள் 2,000 பேர், கோவா விடுதலை பெற நேரு துரிதமாக வேலை செய்யவேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தினராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.